# பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்குப் பரிந்துரைக்கப்பட்ட வேலைத்திட்டம்

தரம் - 5

சுற்றாடல் சார் செயற்பாடுகள்

பாடத்திட்டம்

**2022**

முன் பிள்ளைப்பருவ பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித்துறை

தேசிய கல்வி நிறுவகம்

மகரகம

## நாட்டின் இடர் சூழ்நிலைக் காரணமாக பாடசாலை மாணவர்களுக்கு கிடைக்கப்பெறாத பாடசாலை நாட்களின் பாடத்திட்டத்தினை நிறைவு செய்து கொள்வதற்குரிய அறிவுறுத்தல் திட்டம்.

நாட்டின் COVID– 19 தொற்று இடர்காலம் இன்றைய நாட்டின் சமூக பொருளாதார இடர் சூழ்நிலை காரணங்களால் 2021,2022 ஆம் ஆண்டுக்கான தரம் 01 தொடக்கம் தரம் 05 வரை ஆரம்பப்பிரிவு கல்விப் பிரிவில் கற்கும் மாணவர்களை கருத்திற் கொள்ளும் போது இவர்கள் கல்வி கற்குடம் காலத்தை இழந்துள்ளார்கள் என்பது தகவல் பகுப்பாய்வு மதிப்பீடுகள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு மாணவர்கள் இழந்துள்ள கற்றலுக்குரிய காலவேளைகளின் அடிப்படையினை நோக்காகக் கொண்டு அக் கல்வி ஆண்டுக்கான அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகளை அதனடிப்படையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

அதனடிப்படையில் ஆரம்பக் கல்விப் பிரிவின் 1 – 5 வரையான தரங்களுக்கு முதலாம் தவணைக்கான கற்பித்தல் உள்ளடக்கங்களின் அத்தியாவசியமான பகுதிகள் முன்வைக்கப்படுகின்றன. இவ்வத்தியாவசியமான பகுதிகள் நிறைவேற்றப்படும் போது இரண்டாம் தவணைக்குரிய கற்றல் சந்தர்ப்பங்களை பெற்றுக் கொடுக்க இலகுவாக அமையும் என்பதை மேலும் தெரிவித்துக் கொள்ளலாம்.

எவ்வாறாயினும் நாம் முன்வைக்கும் கருத்து யாதெனில் முதலாம் தவணைக்குரிய மிகவும் அத்தியாவசியமான பாடப்பரப்புக்கள் மாணவர்களுக்கு பெற்றுக் கொடுத்திருப்பின் அவற்றை விடுவித்து அவசியமான தேவையான பாடப்பரப்பில் இருந்து ஆரம்பிக்கலாம்.

ஒவ்வொரு பாடப்பரப்புக்கள் சம்பந்தமாக தேவையான கால அட்டவணையில் மாணவர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப சுகமான முறையில் மாற்றங்கள் ஏற்படுத்திக்கொள்ள சுதந்திரண்டு மாற்றங்களை ஏற்படுத்தி வாய்ப்பு தரப்பட்டிருப்பினும் பாடப்பரப்புகளை நிறைவு செய்வதற்குரிய பொறுப்பு ஆசிரியர்களாகிய உங்களையே சாரும்.

ஒவ்வொரு பாத்திற்குமான பொது ஆசிரியர் வழிகாட்டியின் படி அத்தியவசியமானது என குறிக்கப்பட்ட பாடப்பகுதிகள் மாத்திரம் இங்கு உள்ளடக்கப்பட்டிருக்கின்ற தருவாயில் அத் தவணைக்குரியவைகளை பாடப்பரப்பில் அத்தியவசியமான செயற்பாடுகள் மிகவும் இலகுவான முறையில் தெளிவு படுத்தப்பட்டு பின் வீட்டிலிருந்து கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுத்த உங்களால் முடியுமாயிருத்தல் வேண்டும்.

தெளிவுபடுத்தப்பட்ட செயற்பாடுகள் வீட்டியல் இருந்து செய்வித்தலில் மாணவர்களை எந்த விதத்திலும் இடர் நிலைக்கும் தள்ளப்படக்கூடாது என்பதனையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

எவ்வாறாயினும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் சுமூகம், பாதுகாப்பு, மகிழ்ச்சி இவற்றுடன் மாணவர்களை ஒன்றிணையுங்கள்.
அதன்படி இலங்கை வாழ் ஆரம்பப் பிரிவில் கற்கும் மாணவச் செல்வங்களின் கற்றல் நடவடிக்கைகளை உறுதியுடன் பலனை பெற்றுக்கொள்ளும் நோக்கில் இவை அனைத்தயும் நிறைவு செய்ய எம் அனைவருக்கும் இறைவனின் ஆசியும் அருளும் கிடைக்க பிராத்திப்போம்

# சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் பாடத்தில் ஐந்தாம் தரத்திற்குரிய அத்தியாவசிய பாட உள்ளடக்கங்கள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன. கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின்போது சூழலை ஆராய்தல், விஞ்ஞான பூர்வமான எண்ணக்கருக்களின் பயன்பாடு, மாணவர்களுடன் செயற்படுத்த வேண்டியதுடன் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய கற்றல் பேறுகளுக்குரிய செயற்பாடுகள், விசேடமாக அழகியல், விளையாட்டு மற்றும் ஆக்கச் செயற்பாடுகள் என்பன வீட்டை அடிப்படையாகக் கொண்டு செய்வதற்கு மாணவர்களை வழிப்படுத்த வேண்டும். அழகியல் செயற்பாடுகளுக்குரிய கவிதை, பாட்டு போன்றவற்றின் அர்த்தத்தை பாடுவதற்கு முன் மாணவர்களுக்கு விளக்கப்படுத்தி அதனை வெளிப்படுத்தும் அசைவுகளை முன்வைப்பதற்கு வழிப்படுத்தவும்.

சித்திரம் வரையும் போதும், வடிவமைக்கும் போதும், வாக்கியம் அமைக்கும் போதும் மாணவர்களிடம் காணப்படும் திறன்களின் ஊடாக தமது ஆக்கத்தை வெளிப்படுத்துவதற்கும் அவற்றுக்கு மதிப்பளித்து அவர்களின் ஆக்கத்திறனை விருத்தி செய்வதற்கும் ஊக்கமளிப்பதாக அமைய வேண்டும். வீட்டை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடுகளை செயற்படுத்தும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மாணவர்களது திறன்கள் விருத்தியடையும் வகையில் அதற்குரிய செயற்பாடுகள் அவர்களாலேயே செய்யப்படுவதற்கு வழிப்படுத்த வேண்டும். மாணவர்களது ஆக்கங்களை, பாடசாலைக்கு வரும்போது கொண்டுவருவதற்கும் அவற்றை முன்வைப்பதற்கும் சந்தர்ப்பம் வழங்கவும். தனது திறன்களை குழுவாகவோ அல்லது தனித்தனியாகவோ காட்சிப்படுத்துவதற்கும் அவற்றுக்கு மதிப்பளிப்பதற்கும் செயற்பாடுகளை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தவும்.

மாணவர்களிடம் நல் எண்ணக்கருக்கள் மேலோங்கும் வகையில் ஒவ்வொரு செயற்பாடுகளையும் உள்வாங்கிக் கொள்ளவும் அன்பு, கருணை, இரக்கம், விட்டுக்கொடுப்பு போன்ற விருத்தியடைந்த மனப்பாங்குகளை விருத்தி செய்வதற்கும் கோபம், துன்புறுத்தல், மற்றவர்களை வருத்துதல் போன்ற விரும்பத்தகாத மனப்பாங்குகளை கட்டுப்படுத்துவதற்கும் ஒவ்வொரு செயற்பாட்டிலும் சமூக மனப்பாங்குடைய நபராக மேலோங்கி இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

பொறுமை, ஏனையோருக்கு மதிப்பளித்தல், தலைமைத்துவத்திற்கு மதிப்பளித்தல், குழுவாக செயற்படுதல் போன்ற சமூகத் திறன்கள் விருத்தி தொடர்பாக கவனம் செலுத்தி கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை விருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மேலும் அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

செயற்பாட்டை அடிப்படையாகக் கொண்ட வாய்மொழி ஆங்கில பாடத்திற்கு உரித்தான செயற்பாடுகளை செயற்படுத்தும் போது ஆசிரிய அறிவுரைப்பு வழிகாட்டியில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய நடைமுறைப்படுத்தவும். பாடல்களுக்கு மற்றும் சொற்களுக்கு உரிய செவிப்புல உள்ளீடுகளை (Audio materials) www.nie.lk Downloads-other.meterials English.ABOE ஊடாக பெற்றுக்கொள்ளவும்.

தரம் 5 - சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

| அத்தியவசிய கற்றல் தேர்ச்சிகள் | கருப்பொருள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | எமது நல்வாழ்வு - 1 | • நன்கு ஒழுங்கமைத்துச் செயற்படுவதன் மூலம் தமது வேலைகளை வெற்றிகரமாகச் செய்து கொள்வார்.<br>• நற்பண்புகளை மதித்து அவற்றைப் பேணிவர ஆவன செய்வார்.<br>• உடல், உள நல்வாழ்க்கைக்குப் பொருத்தமான செயற்பாடுகளில் ஈடுபடுவார். | • ஏனையோருடன் செயற்படும்போது முரண்பாடுகள் ஏற்படாதவாறு வார்த்தைகளையும் மெய்ந்நிலைகளையும் கட்டுப்படுத்திக் கொள்வதன் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுவார்.<br>• தீர்மானங்கள் எடுக்கும் போது குழுவில் அனைவரதும் கருதத்து க்களை மதித்துச சரியான தீர்மானங்களை எடுப்பதன் அல்லது மாற்றுப் பிரேரணைகளை முன்வைப்பதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.<br>• முன்மாதிரியான ஒருவரது வாழ்க்கைச்சரிதப் பண்புகளை விசாரணை செய்து அவற்றுள் தமது வாழ்க்கையுடன் இணைத்துக் கொள்ளக்கூடிய பண்புகளைக் கூறுவார்.<br>• ஒரு குழுவாகச் சமூகத்தில் செயற்படும் போது, பேணிவர வேண்டிய, பின்பற்ற வேண்டிய வழக்காறுகளின்படி செயற்படுவார | 02<br>03<br>04<br>05<br>06<br>07<br>10 | 17<br>18<br>19-20<br>21<br>21<br>24<br>25 | 14 மணி |

தரம் 5 - சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

| அத்தியவசிய கற்றல் தேர்ச்சிகள் | கருப்பொருள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | எமது நல்வாழ்வு - 1 | | • உடல், உள நல்வாழ்க்கைக்கான பொருத்தமான செயற்பாடுகளில் ஈடுபடுவார்.<br>• படிப்பினை தரும் கவிதைகள் / பாடல்களின் பொருளை விளங்கி, தாளத்தின்படி ஆடுவார்.<br><br>ABOE - Song Win or Loss<br>ABOE - Games | | | |

தரம் 5 - சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

| அத்தியவசிய கற்றல் தேர்ச்சிகள் | கருப்பொருள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | நாம் இலங்கையர் - 2 | • இலங்கையின் பண்பாட்டு மற்றும் தேசிய மரபுரிமைகளின் இயல்புகளைத் துருவியாய்ந்து அவற்றைப் பாதுகாப்பதில் பங்களிப்புச் செய்வார்.<br>• வெவ்வேறு மக்களினங்கள் அவர்களது பண்பாட்டு இயல்புகள் மற்றும் தனித்துவமான அம்சங்களை மதித்து அவற்றைப் பாதுகாப்பதில் பங்களிப்புச் செய்வார்.<br>• நாட்டின் சுதந்திரத்துக்கென அர்ப்பணிப்புக்கள் செய்தோரை மதித்துத் தேசப்பற்றுடன் செயற்படுவார். | • தேசிய மற்றும் சருவதேச உற்சவங்களின் போது இலங்கையர் ஒருவரின் தனித்துவத்தை எடுத்துக் காட்டும் ஆடையணிகள், உரையாடல்கள் ஆகிய வற்றின் முக்கியத்துவத்தை விளங்கிச் செயற்படுவார்.<br>• தேசிய மரபுரிமைகள் சில தொடர்பான தகவல் களை நுணுகியாய்ந்து அவை தொடர்பாக வெவவேறு வழிகளில் தகவல் முன்வைப்பார்.<br>• நாட்டின் சுதந்திரத்துக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட பல்வேறு தலைவர்கள் ஆற்றிய சேவைகளை மதித்து அறிக்கைப்படுத்துவார்.<br>• தான் வாழும் பிரதேசத்தில் காணப்படும் நிர்வாக நிறுவனங்களை அவதானித்து அவற்றினால் ஆற்றப்படும் சேவைகளை அறிக்கைப்படுத்துவார். | 01<br>02<br>03<br>04<br>06<br>07<br>08 | 30<br>31-33<br>34-35<br>36<br>37<br>38<br>39 | 10 மணி |

தரம் 5 - சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

| அத்தியவசிய கற்றல் தேர்ச்சிகள் | கருப்பொருள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | நாம் இலங்கையர் - 2 | | • தமது பிரதேசத்துக்குரிய அலங்கரிப்புக்கள் தொடர்பாகத் தேடியறிந்து அவற்றுள் சிலவற்றை ஆக்குவார்.<br><br>ABOE - Song We are Sri Lankans.. | | | |

தரம் 5 - சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

| அத்தியவசிய கற்றல் தேர்ச்சிகள் | கருப்பொருள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | மரஞ்செடி கொடிகள் - 3 | • அண்மைச் சுற்றாடலில் உள்ள தாவரங்களினதும் மரங்களினதும் பண்புகளையும் வளரும் விதங்களையும் இனங்கண்டு அறிக்கைப்படுத்துவார்.<br>• தாவரங்களினதும் மரங்களினதும் பெறுமதி யை மதித்து அவற்றைப் பாதுகாப்பதற்காகச் செயற்படுவார். | • தமது இருப்புக்காக மரஞ்செடி கொடிகளின் தன்மை வேறுபட்டுள்ள விதத்தை அவதானித்துப் பகுத்தாய்ந்து அறிக்கைப்படுத்துவார்.<br>• தாவரப் பகுதிகளின் பல்வகைமையைத் தேடியறிந்து விடயங்களை முன்வைப்பார்.<br>• வெவ்வேறு வித்துக்கள், காய்கள் மூலம் தாவரங்கள் பெருகும் விதத்தினைத் தேடியறிந்து அறிக்கைப்படுத்துவார்.<br>• விசேட கவனஞ் செலுத்த வேண்டியுள்ள மரஞ்செடிகொடிகளின் இருப்புத் தொடர்பாக எதிர்வு கூறுவார்.<br>• காட்டுக் குடித்தொகை குறைவடைவதால் ஏற்படும் பாதகமான நிலைமைகள் மற்றும் அவற்றை இழிவாக்கும் வழிகள் தொடர்பான முன்மொழிவுகளை முன்வைப்பார்.<br>• மரஞ்செடி கொடிகளின் முக்கியத்துவம் பற்றிக் கூறும் கவிதைகள், பாடல்கள், நாடக ஆக்கங்களை முன்வைத்துக் களிப்புறுவார்.<br><br>ABOE - Song Large Plant...<br>ABOE - Games Find my name.. | 01<br>02<br>03<br>04<br>05<br>08 | 42<br>43<br>44<br>45<br>46<br>47 | 12 மணி |

தரம் 5 - சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

| அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகள் | கருப்பொருள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | எம்மைச் சூழவுள்ள பிராணிகள் - 4 | • பிராணிகள் பற்றிய அடிப் படைத் தகவல்கள் விசேட திறன்கள் நடத்தைக் கோலம் ஆகியவற்றைத் துருவியாய்ந்து அறிக்கைப்படுத்துவார்.<br>• தாவரங்கள் மற்றும் மனிதர்களுடன் பிராணிகள் காட்டும் இடைத்தொடர்புகளை இனங்காண்பார்.<br>• சூழலின் இருப்புக்காகப் பிராணிகளின் முக்கியத்துவத்தை மதித்து அப்பிராணிகளைப் பாதுகாப்பதில் பங்களிப்புச் செயவார்.<br>• பிராணிகளின் நடத்தைகள் தொடர்பான அசைவு மற்றும் போலச் செய்தல் செயற்பாடுகளில் ஈடுபடுவார். | • சூழலின் மாற்றங்களின்படி, தமது இருப்புக்காகப் பிராணிகள் இயல்புகளைத் தேடியறிந்து தகவல்களை முன்வைப்பார்.<br>• பிராணிகளுக்கும் மனிதருக்கும் இடையிலான தொடர்புகளைக் கற்றாயந்து அறிக்கைப்படுத்துவார்.<br>• பிராணிக் குடித்தொகையின் சமனிலையைப் பேணுவ தற்காகப் பிராணிகளின் போசணைப் பாங்குகள் அமைந்துள்ள விதத்தை நுணுகியாய்ந்து முன்வைப்பார்.<br>• இலங்கைக்கே உரித்தான மற்றும் உரித்தாகாத பிராணிகள் தொடர்பாக நுணுகியாய்ந்து அறிக்கைப்படுத்துவார்.<br><br>ABOE - Song They are animal...<br>ABOE - Games Who am I?.. | 01<br>02<br>03<br>04<br>05 | 50<br>51<br>51<br>52<br>53 | 9 மணி |

தரம் 5 - சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

| அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகள் | கருப்பொருள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | நாம் பயன்படுத்துபவை 5 | • யாதேனும் வேலைக்கெனச் சிறப்பான பண்டங்களையும் உபகரணங்களையும் இனங்கண்டு அவற்றைச் சரியாகவும் ஒழுங்காகவும் பாதுகாப்பாகவும் கையாள்வார்.<br>• நாம் பயன்படுத்தும் பண்டங்கள் சேவைகளைப் பெறும் போதும் வழங்கும் போதும் கருத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்திச் செயற்படுவார்.<br>• வெவ்வேறு இடங்களிலிருந்து பெறும்<br>• சேவைகளையும் வினைதிறனையும் விளைதிறனையும் பயன்படுத்துவார். | • பாடசாலையிலும் வீட்டிலும் பயன்படுத்தும் உபகரணங்களைச் சரியாகவும் பாதுகாப்பாகவும் கையாள முற்படுவார்.<br>• அன்றாடக் கருமங்களின் போது வலுசக்தியாக சிக்கனமாகப் பயன்படுத்தும் விதம் தொடர்பான விளக்கத்துடன் செயற்படுவார்.<br>• பண்டங்களின் விலைகளை முன் - பின் ரீதியில் ஒப்பிட்டு, தரமானவையான தேவையானவற்றை மாத்திரம் தெரிவு செய்துகொள்வார்.<br>• உடனே கிடைப்பனவாகக் கூறப்படும் பிரதிபலன்கள், போலிப்பண்டங்கள் தொடர்பான ஏமாற்று விளம்பரங்கள் குறித்து அறிவூட்டம் பெற்றுச் செயற்படுவார்.<br>• வெவ்வேறு இடங்களிலிருந்து பெறும் சேவைகளை வினைத்திறனாகவும் விளைதிறனாகவும் பயன்படுத்துவார்.<br><br>ABOE - Song Books in the Library..<br>ABOE - Games Who am I?.. | 01<br>02<br>04<br>05<br>06<br>07<br>08 | 59<br>60<br>62-64<br>64<br>65<br>65<br>66 | 7 மணி |